SRI LANKA

இலங்கை கணக்கீட்டுத் தொழில் நுட்பவியலாளர் கழகம்

# Talent (Skills) Capstone

## யூலை 2017 பரீட்சை

**(July 2017 Examination)**

வினாக்களும் பரிந்துரைக்கப்பட்ட விடைகளும்

பாட இலக்கம் : **(SS2)**

# தகவல் தொழிநுட்பவியல் திறன்கள் (ITS)

இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள் கழகம்
இல, 640, வண. முறுத்தெட்டுவென ஆனந்த நாஹிமி மாவத்தை,
நாரேஹேன்பிட்டி, கொழும்பு - 05

தொ.பே - 011 2 559 669

**கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் ஒரு வெளியீடு**

இலங்கை கணக்கீட்டுத் தொழில் நுட்பவியலாளர் கழகம்
கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு

யூலை 2017 பரீட்சை

# (SS2) தகவல் தொழிநுட்பவியல் திறன்கள்

# பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**பகுதி - A**

**குறுநோக்கு வினாக்களுக்கான விடைகள்(OTQs)**
**இருபது (20) கட்டாய வினாக்கள்.**
**(மொத்தம் 40 புள்ளிகள்)**

**வினா 01ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்**

| வினா இலக்கம் | விடைகள் |
|---|---|
| 1.1 | 2 |
| 1.2 | 2 |
| 1.3 | 3 |
| 1.4 | 3 |
| 1.5 | 2 |
| 1.6 | 1 |
| 1.7 | 3 |
| 1.8 | 2 |
| 1.9 | 2 |
| 1.10 | 3 |
| 1.11 | வேலைத்தாள் |
| 1.12 | தரவுத் தகுதிபார்ப்பு |
| 1.13 | MS SQL |
| 1.14 | உயர் மட்டக் களம் |
| 1.15 | OLE Object |
| 1.16 | சரி |
| 1.17 | பிழை |
| 1.18 | சரி |
| 1.19 | பிழை |
| 1.20 | பிழை |

**(மொத்தம் 40 புள்ளிகள்)**

**பிரிவு *A* இன் நிறைவு**

**பகுதி - B**

**நான்கு (04) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.**
**(மொத்தம் 60 புள்ளிகள்)**

## வினா 02ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

a) (i) கணக்கு இலக்கம். **(2 புள்ளிகள்)**

(ii) காரணம் : ஒவ்வொரு நிலையான வைப்பும் திறக்கும் போது கணக்கு இலக்கமானது தனித்தன்மையானதாகும். கணக்கிலக்கத்தை நகல்படுத்த முடியாது. தே.அ.அ.இல. இனை பிரதான புலத்திற்கு கருத்தில் கொள்ளமுடியாது ஏனெனில் ஒருவர் இரண்டாவது நிலையான வைப்புக் கணக்கைத் திறக்கும்போது தே.அ.அ.இல. ஆனது நகல்படுத்தப்படும்.

**(2 புள்ளிகள்)**

b)

| **புலத்தின் பெயர்** | **தரவு வகை** |
|---|---|
| கணக்கின் இலக்கம் | Short text |
| குடும்பப் பெயர் | Short text |
| தே.அ.அ. இலக்கம் | Short text |
| ஆரம்பத் திகதி | Date / Time |
| தவணை | Number |
| தொகை | Currency |
| வட்டி வீதம் | Number |
| முன்னுரிமை வங்கியியல் வாடிக்கையாளர் | Yes /No |

**(8 புள்ளிகள்)**

c)
- முடிவுப் பயனர்
- தரவுத்தள நிர்வாகி
- பயன்பாட்டு நிரலாளர்

**(3 புள்ளிகள்)**

**(மொத்தம் 15 புள்ளிகள்)**

## வினா 03ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(a)

(i) **Sections** : இது அளிக்கையிலுள்ள படவில்லைகளை இரண்டு அல்லது பல குழுக்களாக பிரிப்பதற்கு இடமளிக்கிறது. அதிக படவில்லைகளைக் கொண்ட பெரிய அளிக்கைகளை குழுக்களாக பிரிக்க வடிவமைக்கப்பட்டுள்ளது.

(ii) **Themes** : Themes ஆனது நிறங்களின், எழுத்துரு மற்றும் விசேட தோற்றங்களைக் கொண்ட பகுதியாகும். ஒரு திறமையான வடிவமைப்பாளர் பவர் பொயின்டில் ஒவ்வொரு "Theme" இனையும் உருவாக்க முடியும். "Theme" இன் மூலம் படவில்லையில் tables, SmartArt, shapes அல்லது charts என்பவற்றை பிரயோகிக்க முடியும்.

(iii) **Transitions** : Transitions ஆனது பவர் பொயின்ட் படவில்லை அல்லது படம் ஆனது ஒன்றிலிருந்து அடுத்ததற்கு எப்படி மாற வேண்டும் என்பதனைத் தீர்மானிக்கிறது. இது உங்கள் அளிக்கையை மேலும் சுவாரஸ்யமாக்குகிறது. இதன் மூலம் சிறப்பு ஒலிகளையும் உங்கள் அளிக்கையில் உருவாக்கிக்கொள்ளலாம். படவில்லை சாதாரணமாக மறையவோ அல்லது கண்ணைக்கவரும் வகையில் அடுத்த படவில்லைக்கு மாறும் வகையிலோ இதன் மூலம் செய்யலாம்.

(iv) **Animations** : பவர் பொயின்டில் எழுத்துக்கள் மற்றும் உருவங்கள், படங்கள் என்பவற்றை Animation செய்ய முடியும். Animations ribbon இல் அதற்குரிய கருவிகளும் தெரிவுகளும் உள்ளது. படவில்லையில் உள்ள விடயங்களை இதன் மூலம் இலகுவாக வாசிக்க முடியும்.

(v) **Macros** : Macros ஆனது பவர் பொயின்ட் செயற்பாட்டினை விரைவு மற்றும் இலகுவாக்குகிறது. நீங்கள் தொடர்ச்சியாக நடவடிக்கைகளை தானியங்கு செய்யலாம் மற்றும் படவில்லைக் காட்சியின் திறனை அதிகரிக்கலாம். அளிக்கையின் போது நேரத்தை சேமிக்கவும், அளிக்கையின் தன்மையை உயர்த்தவும் உதவுகிறது.

(vi) **Slide Master** : எல்லா படவில்லையில் ஒரே எழுத்துரு மற்றும் படங்கள் தோன்ற வேண்டுமாயின் Slide Master இனைப் பயன்படுத்தி செய்ய முடியும்.

**(12 புள்ளிகள்)**

(b) மைக்ரோசாப்ட் பவர் பொயின்ட் 2016 இல், "Present Online Feature" இனைப் பயன்படுத்துவதன் மூலம் அளிக்கையினையும் "Office Presentation Service" இனையும் இணைக்க முடியும். ஒவ்வொரு பார்வையாளரும் இணையத்தைப் பயன்படுத்தி இவ்வலைப்பக்கத்தை அணுக முடியும். சொடுக்குவதன் மூலம் அளிக்கையை பார்க்கமுடியும்.

**(3 புள்ளிகள்)**

**(மொத்தம் 15 புள்ளிகள்)**

## வினா 04ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(a) =MAX(B2:B8)

(b) =MIN(B2:B8)

(c) =AVERAGE(B2:B8)

(d) =VLOOKUP(B10, B1:D8,3,FALSE)

(e) =COUNTIF(C2:C8,"Passed") or =COUNTIF(C2:C8,$C$2)

(f) =COUNT(B2:B8)

**(15 புள்ளிகள்)**

## வினா 05ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(a) Mozilla Firefox, Google Chrome, Internet Explorer

**(3 புள்ளிகள்)**

(b)

(i) **Home :** இதன் மூலம் பயனர் மீண்டும் இயலபான(Default) இணயப்பக்கத்திற்கு திரும்ப பயன்படுகிறது. உலாவியைத் திறக்கும் போதும் இப்பக்கமே தோன்றும்.

(ii) **Back :** Back பொத்தான் ஆனது தற்போது உள்ள பக்கத்திற்கு முந்திய பக்கத்திற்கு செல்லும்.

(iii) **Reload :** இணையப்பக்கத்தை இணைய சேவகத்தில் Reload செய்கிறது.

(iv) **Bookmarks :** பயனரினால் தெரிவு செய்யப்படும் இணையத்தளம் அல்லது பக்கத்தை சேகரிக்கும் கோப்புறையாகும்.

(v) **Private Window / Incognito Window :** பயனர்களின் இணைய உலாவித்தகவல்களை கணினியில் சேமிப்பதைத் தவிர்க்கிறது. விசேடமாக நீங்கள் பொதுக் கணினி அல்லது பகிரப்பட்ட கணினியை பயன்படுத்தும் போது உங்கள் சம்பந்தப்பட்ட தகவல்களுக்கு தனித்தன்மை மற்றும் பாதுகாப்பையும் தருகிறது. "Incognito Window" உலாவியைப் பயன்படுத்துவது பரிந்துரைக்கப்படுகிறது.

(vi) **Addons / Extensions :** "Add-on" மற்றும் "Entension" என்பன சொருகிகளாகும்(Plug in) அது இணைய உலாவியின் செயற்பாட்டை அனுமதிக்கிறது.
**(12 புள்ளிகள்)**

## வினா 06ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

<table>
<tr><td>To:</td><td></td><td>(01 புள்ளி)</td></tr>
<tr><td>CC:</td><td></td><td>(02 புள்ளிகள்)</td></tr>
<tr><td>BCC:</td><td></td><td>(02 புள்ளிகள்)</td></tr>
<tr><td>Subject:</td><td></td><td>(02 புள்ளிகள்)</td></tr>
<tr><td colspan="2">அன்பின் திரு.</td><td>(02 புள்ளிகள்)</td></tr>
<tr><td colspan="2">2017.06.01 ந் திகதிய எனது முன்னைய மின்னஞ்சல் தொடர்பானது. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள வடிவமைப்புக்கான மதிப்பீடு ஒன்றினைத் தயவு செய்து எங்களுக்கு வழங்கவும். இவ்வடிவமைப்புக்கான தொழினுட்ப விவரணங்களும் அதே வரிப்படத்தில் இணைக்கப்பட்டுள்ளன. உங்களது விலைமனுவில் சாதனத்திற்கான நிதித் தவணைகள், உத்தரவாதம் மற்றும் பராமரிப்பு அட்டவணைகள் போன்றவற்றையும் குறிப்பிடுதல் வேண்டும்.<br>நன்றி,</td><td></td></tr>
<tr><td colspan="2">உண்மையுள்ள,</td><td>(02 புள்ளிகள்)</td></tr>
<tr><td>கையொப்பம்</td><td></td><td>(02 புள்ளிகள்)</td></tr>
<tr><td>இணைப்பு</td><td></td><td>(02 புள்ளிகள்)</td></tr>
</table>

**(மொத்தம் 15 புள்ளிகள்)**

## வினா 07ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(a)

(i) **Thesaurus :** "Thesaurus" இனைப் பயன்படுத்தி நீங்கள் "Synonyms" (வெவ்வேறு சொற்கள் ஒரே கருத்து) மற்றும் "antonyms" (எதிர்க்கருத்துச் சொற்கள்) இனைப்பார்க்கமுடியும்.

(ii) **Track Changes :** உங்கள் ஆவணத்தில் மாற்றங்களை யார் உருவாக்கலாம் என்பதை நீங்கள் பார்க்க விரும்பும் போது நீங்கள் "Track changes" எனும் அம்சத்தைத் திறக்க வேண்டும். நீங்கள் "Track changes" இனை நிறுத்தும் போது சொல் புதிய மாற்றத்தை செய்வதை நிறுத்துகிறது. நீங்கள் அவற்றை அகற்றும் வரை, ஏற்கனவே பதிவுசெய்யப்பட்ட எந்த மாற்றங்களும் ஆவணத்தில் குறிக்கப்படும்.

(iii) **Table of Contents :** 'TOC" ஆனது தொழில்சார்ந்த ஆவணத்தில் ஒரு முக்கிய பொது அம்சமாகும். மைக்ரோசாப்ட் வேட் ஆனது எந்தவொரு வடிவினைப்(style) பிரயோகிக்காமல் ஒரு "TOC" உருவாக்குவதற்கான வாய்ப்பு அனுமதிப்பதன் மூலம் நீங்கள் குறிப்பிட்ட பகுதியில் ஒரு சொல் அல்லது சொற் குழுக்கள் "TOC" மூலம் உருவாக்கிக் கொள்ளலாம்.

(iv) **Page Break :** மைக்ரோசாப்ட் வேட் ஆனது நீங்கள் ஆவணம் ஒன்றை உருவாக்கும் போது ஒவ்வொரு பக்கத்தின் முடிவிலும் தன்னிச்சையாக "Page break" இனை செருகுகிறது. நீங்கள் தன்னிச்சையற்றும் ஆவணத்தில் வேறு எவ்விடத்தேனும் "Page break" இனை சேர்க்க முடியும். "Page break" இனை சேர்த்த பின், தொடக்கப்புள்ளி புதிய பக்கத்திற்கு நகர்ந்துவிடும்.

(v) **Watermark :** நீர்க்குறிகள் ஆனது உரை அல்லது படங்கள் மூலம் ஆவணத்தில் எழுத்துக்களுக்கு பின்புறம் அமைந்திருக்கும். "Draft" அல்லது "Confidential" போன்ற உரை நீர்க்குறிகளையும் உங்கள் ஆவணங்களில் சேர்த்துக்கொள்ளலாம். மைக்ரோசாப்ட் வேட்டில் நீர்க்குறி காட்சியகம் உள்ளது. கம்பனி குறியீடு போன்று உங்கள் விருப்பப்படி உருவாக்கியும் கொள்ளலாம்.

(vi) **Themes :** "Theme" இனைப் பிரயோகித்து உங்கள் ஆவணத்தை மிகவும் விரைவாகவும், இலகுவாகவும் ஒரு சிறந்த ஆவணமாக்கிக் கொள்ளலாம். "Theme" ஆனது ஒரு தொகுதி நிறங்கள், ஒரு தொகுதி எழுத்துருக்கள் மற்றும் ஒரு தொகுதி கருப்பொருள் தோற்றங்களைக் கொண்ட வடிவமைப்புத் தேர்வாகும்.

(12 புள்ளிகள்)

(b) "SmartArt" ஆனது காட்சிசார் அளிக்கைத் தகவலாகும், பல வேறுபட்ட தளக்கோலத்திலிருந்து விரைவாக மற்றும் இலகுவாக இதனை உருவாக்கிக்கொள்ளலாம்.

"WordArt" ஆனது மிகவிரைவாக உரைக்கு விசேட வடிவமைப்பை வழங்குகிறது. "WordArt" காட்சியறையில் இருந்து வடிவமைப்புக்களைப் பெறலாம்.

**(3 புள்ளிகள்)**
**(மொத்தம் 15 புள்ளிகள்)**

**பிரிவு *B* இன் நிறைவு**

***Notice :***

These answers complied and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of study material for AAT students.

These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the "Only" answers, or, for that matter even as "Model Answers".

The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designs especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

*© 2017 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*

*All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*